## ii. Language I – தமிழ் – **Tamil**

31. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' – இப்பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல்
    A பரிபாடல் B புறநானூறு C நற்றிணை D ஐங்குறுநூறு

32. திருக்குறளில் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை
    A 130 B 163 C 133 D 70

33. ஒரு சொல்லோ, தொடரோ இருபொருள்படுமாறு பாடுதல்
    A யமகம் B சிலேடை C அந்தாதி D இரட்டுறமொழிதல்

34. மருதத் திணைக்குரிய நிலம்
    A மலை B கடல் C வயல் D காடு

35. 'கோ + இல்' என்பது எவ்வாறு புணரும்
    A கோயில் B கோயிலில் C கோஇல் D கோவில்

36. 'ஊரும் பேரும்' என்னும் நூலின் ஆசிரியர்
    A ரா.பி. சேதுப்பிள்ளை B வ.வே.சு. ஐயர்
    C திரு.வி.க. D வ.சுப. மாணிக்கம்

37. 'திறை' என்ற சொல் உணர்த்தும் பொருள்
    A திரை B ஓவியம் C மறைத்தல் D வரி

38. 'பனி கொட்டியது' – இது எவ்வகை மரபு
    A பொது மரபு B பெயர் மரபு C ஒலி மரபு D வினை மரபு

39. தமிழில் தோன்றிய முதல் நாவல்
    A கமலாம்பாள் சரித்திரம் B பத்மாவதி சரித்திரம்
    C என் சரித்திரம் D பிரதாப முதலியார் சரித்திரம்

40. 'குழந்தைக் கவிஞர்' என்றழைக்கப்படுபவர்
    A பாரதியார் B அழ. வள்ளியப்பா
    C நாமக்கல்லார் D வாணிதாசன்

**கீழுள்ள பத்தியைப் படித்து வினா 11 முதல் 13 வரை விடையளிக்க**

திரு.வி.க., மு.வ. இருவரும் தமிழ் உரைநடை வளர்ச்சியில் பெருமளவிற்குத் தம் பங்கினைச் செலுத்தியுள்ளனர். பாரதியைப் பின்பற்றிக் 'கவிஞர் மண்டலம்' ஒன்று தோன்றி 20ஆம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதைக்குப் புதியதோர் ஆக்கத்தையும் எழுச்சியையும் ஏற்படுத்தியதைப்போல், திரு.வி.க.வைப் பின்பற்றி எழுதவேண்டும் என்னும் உந்துதல் தமிழ் உரைநடைக்குப் புதியதோர் ஆற்றலை வழங்கியது. திரு.வி.க., காட்டிய திசையில் நடைபோட்டுத் தமிழ் உரைநடைக்குப் பொலிவு சேர்த்தவருள் முதன்மையானவர் மு.வ. ஆவார்.

41. தமிழ் உரைநடை வளர்ச்சிக்குப் பெரும்பங்காற்றிய தமிழறிஞர்
A பாவாணர் B திரு.வி.க. C சேதுபிள்ளை D மறைமலையடிகள்

42. 'கவிஞர் மண்டலம்' யாரைப் பின்பற்றித் தோன்றியது
A மகாகவி பாரதி B சுத்தானந்தபாரதி
C சோமசுந்தரபாரதி D சுப்பிரமணிய சிவா

43. திரு.வி.க.வின் வழியில் உரைநடைக்குப் பொலிவு சேர்த்தவர்
A அகத்திய லிங்கம் B க.ப. அறவாணன்
C வா.செ. குழந்தைசாமி D மு.வ.

44. 'ஏவா மக்கள் மூவா மருந்து' – இவ்வரியில் 'மூவா' என்ற சொல் உணர்த்தும் பொருள்
A இளமை B முதுமை C பொறுமை D பெருமை

45. 'சர்வகலாசாலை' என்ற வடசொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல்
A பாடசாலை B கல்லூரி
C பல்கலைக்கழகம் D நிகர்நிலைப்பல்கலைக்கழகம்

46. பொற்கொல்லர் 'பொன்னை' ____________ என்று குறிப்பர்
A பரி B பறி C அணிகலன் D செலவு

47. 'கண்ணன் வந்தது' – இது எவ்வகை வழு
A பால் வழு B இட வழு C திணை வழு D கால வழு

48. தாயுமானவர் வாழ்ந்த ஊர்
A தேரழுந்தூர் B உறையூர் C திருமறைக்காடு D சீர்காழி

49. "வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே" – என்று பாடியவர்
A பாரதியார் B வாணிதாசன் C பாரதிதாசன் D கம்பதாசன்

50. வினாக்கள் எத்தனை வகைப்படும் என்று நன்னூல் கூறுகிறது ?
A ஆறு B ஏழு C பதினொன்று D ஒன்பது

51. 'மணநூல்' என்று அழைக்கப்படுவது
A சிலப்பதிகாரம் B சீவகசிந்தாமணி
C மணிமேகலை D குண்டலகேசி

52. சத்திய தருமச்சாலையை நிறுவியவர்
A ஆறுமுக நாவலர் B கல்பட்டு அய்யா
C திருமூலர் D இராமலிங்க அடிகள்

53. தமிழ்நாட்டின் 'முதல் அரசவைக் கவிஞர்'
A கண்ணதாசன் B நாமக்கல் கவிஞர்
C புலமைப்பித்தன் D உவமைக் கவிஞர் சுரதா

54. “பகைவனுக்கு அருள்வாய் – நன்னெஞ்சே
பகைவனுக்கு அருள்வாய்” என்று பாடியவர்

A இராமலிங்க அடிகள் B பாவேந்தர்
C மாணிக்கவாசகர் D பாரதியார்

55. ஆந்தை

A கத்தும் B அலறும் C அகவும் D கூவும்

56. ‘திரிகடுகம்’ என்பதில் ‘திரி’ என்ற சொல் உணர்த்தும் மருந்துப் பொருள்களின் சரியான வரிசையைத் தேர்ந்தெடு

A மிளகு, சுக்கு, திப்பிலி B சுக்கு, மிளகு, திப்பிலி
C சுக்கு, திப்பிலி, மிளகு D திப்பிலி , சுக்கு, மிளகு

57. ‘தமிழில் முதலெழுத்துகள்’ மொத்தம்

A 12 B 18 C 30 D 247

58. ‘பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக’ – யார் யாரிடம் கேட்டார்

A சிவபெருமான் அப்பரிடம் B சிவபெருமான் சுந்தரரிடம்
C சிவபெருமான் மாணிக்கவாசகரிடம் D சிவபெருமான் சம்மந்தரிடம்

59. தமிழில் 2011–ஆம் ஆண்டிற்கான ‘சாகித்யஅகாதெமி’ விருதுபெற்றவர்

A பிரபஞ்சன் B சு. வெங்கடேசன் C மேலாண்மை பொன்னுசாமி D நாஞ்சில்நாடன்

60. ஈரசைச் சீர்கள் மொத்தம்

A 2 B 8 C 4 D 16

iii. Language II - **ஆங்கிலம் – English**

**Choose the correct word to fill in the blank in the sentence**

61. He met _______ European in Mahabalipuram last week

A a B the C an D any

61. What is the time _________ your watch?

A in B by C at D on

63. When I reached the station, the train __________ already.

A went B had left C has been left D has left